# பாடம் 47: முறைநேர வழிபாடு

**விசுவாசத்தைக் கற்பிப்போருக்கான அறிவுறுத்தல்**

| | |
|---|---|
| அடிப்படை நிலை (9 வயது) | : 1 முதல் 6 கருத்துகளைக் கற்பிக்கவும் |
| இடைப்பட்ட நிலை (12 வயது) | : 1 முதல் 8 கருத்துகளைக் கற்பிக்கவும் |
| மேம்பட்ட நிலை (15 வயது) | : 1 முதல் 9 கருத்துகளைக் கற்பிக்கவும் |

**முந்திய பாடத்தில் இருந்து மீள்பார்வை:**

முந்திய பாடத்தில், கிறிஸ்தவர்களுக்கு மிக முக்கியமான செபத்தை, அதாவது, ஆண்டவரின் செபத்தை நாம் கற்றோம், இது பொதுவாக 'விண்ணுலகில் இருக்கிற' என அறியப்படுகிறது. இந்த பாடத்தில், மற்றொரு முக்கிய செபமான, முறைநேர வழிபாடு என அறியப்படுகிறதைப் பற்றி நாம் கற்போம். இது திருச்சபையின் அலுவல்சார் செபமாகவும் இருக்கிறது.

**தற்போதைய பாடம்:**

1. குருக்கள், திருத்தொண்டர்கள், அல்லது துறவறத்தார் இடையிடையே ஒரு சிறிய கருப்பு புத்தகத்தைக் கொண்டு செபிப்பதைப் பொதுவாகக் காணலாம். சில நேரங்களில் பொதுநிலை மக்களும் அதே கருப்பு புத்தகத்தோடு ஆலயத்தின் நீளிருக்கையில் செபிப்பதற்காக அமர்வர். இறை அலுவல் என்றும் அறியப்படும் முறைநேர வழிபாட்டை நாள்தோறும் செபிப்பது குருக்கள், திருத்தொண்டர்கள், மற்றும் துறவறத்தாருக்கு கடமையாகும். ஒவ்வொரு நாளும் வேறுபட்ட நேரங்களில், காலை முதல் இரவு வரை செபிப்பதற்கான செபங்களின் தொகுப்பை இது கொண்டுள்ளது. இது கடவுளுக்கு அர்ப்பணித்தோருக்கு மட்டும் ஒதுக்கப்பட்ட வழக்கமுறை செபமாக அன்றி, பொதுநிலையினருக்குமான பொது செப நடைமுறையாக இருக்கிறது.

2. வரலாற்றில், யூதர்கள் நாள் முழுவதும் குறிப்பிட்ட இடைவேளைகளில் செபித்தனர். யூத மக்கள் ஒரு நாளில் மூன்று தடவைகள் செபிக்கும் மரபைத் தொடங்கினர்: காலை, பிற்பகல், மற்றும் மாலை. இது மனித இதயத்தின் பல்வேறு ஆசைகளை வெளிப்படுத்துகின்றத் திருப்பாடல்களை செபிக்கும் நிகழ்வாக வளர்ச்சி பெற்றது.

3. பெரும்பாலான தொடக்கக் கிறிஸ்தவர்கள் யூதத்தில் இருந்து மனந்திரும்பியவர்கள் என்பதால், அவர்கள் திருப்பாடல்களை செபிக்கும் மரபைத் தொடர்ந்தனர். இவ்வகையான செபம் திருச்சபை வளர்ந்தபோதும் பேணப்பட்டது. *முறைநேர வழிபாட்டை செபித்தல்* என்ற தமது நூலில் தந்தை திமோத்தி காலகெர், ''திருச்சபை முழுவதும், பாலஸ்தீன், அந்தியோக்கியா, கொன்ஸ்தாந்திநோபிள் மற்றும் ஆப்ரிக்காவில், கிறிஸ்தவர்கள் ஒவ்வொரு நாளும் தங்கள் ஆலயங்களில் இருமுறை ஒன்றுகூடி திருப்பாடல்களைச் செபித்தனர். அன்றாடம் அவர்கள் 'காலை, மாலை பாசுரங்களுக்காக' ஒன்றாகத் திரண்டனர்'' என்கிறார்.

4. ''இடைவிடாமல் செபியுங்கள்'' (1தெச 5:17) என்ற புனித பவுலின் வார்த்தைகளை வாழ்ந்து காட்டுமாறு, ஏழு அல்லது எட்டு தடவைகள் திருப்பாடல்களைச் செபிக்கும் வகையில் பின்னர் இந்த மரபு துறவுமடங்களில் விரிவடைந்தது, இந்த மரபு பார்ப்பதற்கு இவ்வாறு இருக்கிறது:

*மாத்தின்ஸ்* (இரவு வேளையில், பெரும்பாலும் நள்ளிரவில்); திருவிழிப்பு அல்லது நெக்டர்ன்ஸ் (இரவு அலுவல்) என்றும் அழைக்கப்படுகிறது
*லாட்ஸ்* அல்லது ''வைகறை செபம்'' (விடியலில், அல்லது காலை 3 மணி)
*ப்ரிமே* அல்லது ''அதிகாலை செபம்'' (முதலாம் மணி, காலை 6 மணி அளவில்)
*தெர்சே* அல்லது ''காலை செபம்'' (மூன்றாம் மணி, காலை 9 மணி அளவில்)
*செக்ஸ்த்* அல்லது ''நண்பகல் செபம்'' (ஆறாம் மணி, பகல் 12 மணி அளவில்)
*நோனே* அல்லது ''பிற்பகல் செபம்'' (ஒன்பதாம் மணி, பகல் 3 மணி அளவில்)
*வெஸ்பர்ஸ்* அல்லது ''மாலை செபம்'' (மாலை 6 மணி அளவில்)
*கொம்ப்ளைன்* அல்லது ''இரவு செபம்'' (உறங்கச் செல்லும் முன், இரவு 8 அல்லது 9 மணி)

திருச்சபை இந்த நேரங்களின் கடவையில் 150 திருப்பாடல்களைக் கொண்டு ஒரு செப சுழற்சியை உருவாக்கியுள்ளது. தற்போது இது நான்கு வார திருப்பாக்களைக் கொண்டுள்ளது,

இதன் வழியாக (எல்லா செப நேரங்களையும் கடைபிடித்தால்) நான்கு வாரக் காலத்திற்குள் எல்லா திருப்பாடல்களும் செபிக்கப்படுகின்றன.

5. ஆழ்தியானத்திற்கான துறவுமடங்கள் (எடுத்துக்காட்டாக, காலணியிலா கார்மேலியர்கள்) இந்த செபத்தின் இசைவைக் கடைபிடிப்பர், குருக்களும் மற்றத் துறவறத்தாரும் லாட்ஸ் (வைகறை) மற்றும் வெஸ்பர்ஸ் (மாலை) மட்டுமே செபிப்பர். செபம் மற்றும் வேலையின் புனித இசைவோடு ஒத்திணங்கும் அடைவுமட ஆண்கள் மற்றும் பெண்களை விட, உலகில் இருப்போருக்கு நாளின் நேரம் குறைவாக உள்ளது ஒரு பிரச்சனையாக இருக்கிறது.

6. இரண்டாம் வத்திக்கான் சங்கத்தில் இருந்து, இந்த நடைமுறையை தொடர்ந்து முன்னெடுத்துச் சென்று, இந்த திருவழிபாட்டில் சேரப் பொதுநிலையினரை ஊக்குவிக்கிறது.

*சாக்ரோசான்க்டம் கொன்சீலியம்*, 100: ‘‘ஞாயிற்றுக்கிழமைகள் மற்றும் பெருவிழா நாட்களில் முதன்மை நேரங்கள், சிறப்பாக வெஸ்பர்ஸ் (மாலை) பொதுவில் ஆலயத்தில் கொண்டாடப் படுமாறு ஆன்மாக்களின் மேய்ப்பர்கள் பார்த்துக்கொள்ள வேண்டும். பொதுநிலையினரும் குருக்களோடு, அல்லது தங்களிடையே, அல்லது தனியாக இறை அலுவலை வாசிக்க ஊக்குவிக்கப்படுகின்றனர்.’’

7. இந்த செபத்தின் அடித்தளம் எளிதானது, திருப்பாடல்களைச் செபிப்பதாகும், ஆனால் நடைமுறையில் சற்றுக் கடினமாக இருக்கலாம். ஒருவர் திருப்புகழ்மாலையை (முறைநேர வழிபாட்டைக் கொண்டுள்ள நூல்) வாங்குவதை தேர்ந்தெடுத்தால், நீங்கள் என்ன செய்ய வேண்டுமென காட்ட எவரும் இல்லையெனில் அது உங்களுக்கு சவாலாக இருக்கலாம்.

அருள்பணியாளர்களும் துறவறத்தாரும் (பொதுநிலையினரும்) முறைநேர வழிபாட்டை செபிக்க கைப்பேசி செயலிகளைப் பயன்படுத்துவது அதிகரித்துள்ளது. இந்நாட்களில் அவர்களில் குறைவானவர்களே திருப்புகழ்மாலை நூலைப் பயன்படுத்துகின்றனர்.

8. வைகறை செபம் மற்றும் மாலை செபத்தின் அடிப்படை அமைப்பு இவ்வாறு உள்ளது:

- தொடக்கப் பல்லவி (அல்லது வைகறை செபத்திற்கான அழைப்புரை)
- ஒரு பாசுரம்;
- இரு திருப்பாடல்கள், அல்லது மறைநூல் பாடலுடன் திருப்பாடல்களின் பகுதிகள். வைகறை செபத்தில், புகழ்ச்சித் திருப்பாடல், பழைய ஏற்பாட்டில் இருந்து ஒரு பாடல், தொடர்ந்து மற்றொரு திருப்பாடலை இது கொண்டிருக்கும். மாலை செபத்தில், இரண்டு திருப்பாடல்கள் அல்லது திருப்பாடலின் பிரிக்கப்பட்ட இரு பகுதிகள், மற்றும் புதிய ஏற்பாட்டில் இருந்து எடுக்கப்பட்ட ஒரு மறைநூல் பாடலை இது கொண்டிருக்கும்;
- மறைநூலில் இருந்து ஒரு குறுகியப் பத்தி;
- ஒரு பதிலுரை, பொதுவாக மறைநூலின் ஒரு வசனம், சில நேரங்களில் திருவழிபாட்டுச் செய்யுள்;
- லூக்கா நற்செய்தியில் இருந்து எடுக்கப்பட்ட ஒரு பாடல்: வைகறை செபத்துக்கு செக்கரியாவின் பாடல் (*பெனதிக்துஸ்*), மாலை செபத்துக்கு மரியாவின் பாடல் (*மாக்னிபிகாத்*);
- திருச்சபையால் இயற்றப்பட்ட வேண்டுதல்கள்;
- ஆண்டவரின் செபம்;
- திருச்சபையால் இயற்றப்பட்ட முடிவு செபம்;
- வைகறை அல்லது மாலை செபத்தை நடத்தும் குரு அல்லது திருத்தொண்டர் வழங்கும் ஆசி, அல்லது அருள்பணியாளர் இல்லாத மற்றும் தனிநபர் செபத்தில் ஒரு முடிவு பல்லவி.

9. மாணவர்களுடன் இணைந்து முறைநேர வழிபாட்டைச் செபிக்கவும். தேவையெனில் கைப்பேசி செயலியை நீங்கள் பயன்படுத்தலாம்.